TNVR070023482023

மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சாத்தூர்
முன்னிலை – செல்வி. அ. இலக்கியா, பி.பி.ஏ., எல்எல்.பி.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி, சாத்தூர்.
2026 ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 24 ம் நாள் வெள்ளிக்கிழமை
அசல் வழக்கு எண்.62/2023
C.N.R.No.*TNVR070023482023*
------

B. சுப்புராஜ், வயது சுமார் 72, லேட், த/பெ. பாலகிருஷ்ண நாயக்கர், எண்.9, வரதராஜ் நகர், கோயம்புத்தூர். ..
வாதி

/எதிர் /

1. K. ராஜாராம், வயது சுமார் 72, த/பெ. கடற்கரை நாடார், கதவு எண்.38/1, பழைய டிரங்க் ரோடு, சாத்தூர், விருதுநகர் மாவட்டம்.

2. K.பிரதாப்சிங், வயது சுமார் 68, த/பெ. கடற்கரை நாடார், கதவு எண்.27, வ.உ.சி. தெரு, சாத்தூர் விருதுநகர் மாவட்டம்.

3. K. தயாநந்த கணேஷ், வயது சுமார் 62, த/பெ. கடற்கரை நாடார், கதவு எண்.5, பழைய டிரங்க் ரோடு, சாத்தூர், விருதுநகர் மாவட்டம்.

4. A. அமிர்தம் சூரிய பகவான்தாஸ், (வயது தெரியவில்லை), த/பெ. லேட். அமிர்தம் கோட்டைய நாயுடு, மிலிட்டரி காலனி, ஏ.கே. நகர், நெல்லூர் டவுண், நெல்லூர், ஆந்திர மாநிலம்.

5. A. அமர் பாபு, (வயது தெரியவில்லை), த/பெ. லேட். அமிர்தம் கோட்டைய நாயுடு, மிலிட்டரி காலனி, ஏ.கே. நகர், நெல்லூர் டவுண், நெல்லூர், ஆந்திர மாநிலம்.

6. A. லெட்சுமி பிரசன்னா, (வயது தெரியவில்லை), த/பெ. லேட். அமிர்தம் கோட்டைய நாயுடு, மிலிட்டரி காலனி, ஏ.கே. நகர், நெல்லூர் டவுண், நெல்லூர், ஆந்திர மாநிலம். .. பிரதிவாதிகள்

தபசில் சொத்து வாதிக்கு மட்டுமே பாத்தியப்பட்டது என்று விளம்புகை செய்தும், 1 முதல் 3 பிரதிவாதிகள் வாதியின் அனுபவத்தினையும், பாத்தியத்தையும் எவ்விதத்திலும் இடையூறு செய்யக்கூடாது என்று நிரந்தர உறுத்துக் கட்டளை வழங்க உத்தரவிட வேண்டியும், கடந்த 13.03.1990 அன்று 4 ம் பிரதிவாதி 1 முதல் 3

பிரதிவாதிகளுக்கு மோசடியாக பதிவு செய்து கொடுத்துள்ள கிரைய ஆவணம்576/1990–ஐ ரத்து செய்து செல்லாது என்று விளம்புகை செய்ய வேண்டியும், இவ்வழக்கு செலவுத் தொகையை வாதிக்கு, பிரதிவாதிகள் வழங்க உத்தரவிட வேண்டியும் மற்றும் இதர பரிகாரங்கள் வேண்டியும் வாதியால் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| வழக்கு தாக்கல் நாள் | 28.07.2023 |
| வழக்கு கோப்பிற்கு எடுத்த நாள் | 01.08.2023 |
| வழக்கு மூலம் | 1995, 13.03.1987, 13.03.1990 ஆகிய தேதிகளில் இ. முத்துலிங்கபுரம் கிராமத்தில் வைத்து உற்பத்தி |
| நீதிமன்றக் கட்டணம் | 1வது பரிகாரத்திற்காக தாவா வழக்கின் மொத்த மதிப்பு ரூ.1,70,000/– அதில் பாதி மதிப்பு ரூ.85,000/– என மதித்து அதற்கு த.நா.நீ.மு.க. சட்டப்பிரிவு 25(b)ன் படி ரூ.2550/–ம், 2வது பரிகாரத்திற்காக தாவா வழக்கின் மதிப்பு ரூ.5,000/– என மதித்து அதற்கு த.நா.நீ.மு.க. சட்டப்பிரிவு 25(d)ன் படி ரூ.150/–ம், மொத்தம் ரூ.2700/– நீதிமன்றக் கட்டணமாக செலுத்தப் பட்டுள்ளது. |

இந்த வழக்கானது இறுதியாக என் முன்பாக 20.04.2026 அன்று விசாரணைக்காக வந்த போது வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு. K. சேதுராமானுஜம், அவர்கள் ஆஜராகியும், 1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு. எஸ். ஸ்ரீராம், அவர்கள் ஆஜராகியும், போதிய காலஅவகாசம் அளித்தும் எதிர்வழக்குரை தாக்கல் செய்யாத காரணத்தால் தோன்றாத் தரப்பினராக்கப்பட்ட நிலையிலும், 4 முதல் 6 பிரதிவாதிகள் அழைத்தும் ஆஜராகாத காரணத்தால் தோன்றாத் தரப்பினராக்கப்பட்ட நிலையிலும், வாதி தரப்பு சாட்சியம் மற்றும் சான்றாவணங்கள் ஆகியவற்றை பரிசீலனை செய்து இந்நீதிமன்றம் வழங்கும்.

## <u>தீர்ப்பாணை</u>

1) வாதியின் வழக்கு அனுமதிக்கப்படுகிறது.

2) தபசில் சொத்து வாதிக்கு மட்டுமே பாத்தியப்பட்டது என்று விளம்புகை செய்தும், 1 முதல் 3 பிரதிவாதிகள் வாதியின் அனுபவத்தினையும், பாத்தியத்தையும் எவ்விதத்திலும் இடையூறு செய்யக்கூடாது என்று நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரம் வழங்கப்படுகிறது.

3) கடந்த 13.03.1990 அன்று 4ம் பிரதிவாதி 1 முதல் 3 பிரதிவாதிகளுக்கு மோசடியாக பதிவு செய்து கொடுத்துள்ள கிரைய ஆவணம் 576/1990–ஐ ரத்து செய்து செல்லாது மற்றும் இல்லா நிலையது என விளம்புகை பரிகாரம் வழங்கப்படுகிறது.

4) செலவுத் தொகை இல்லை.
(இருதரப்பிலும் செலவுத் தொகை பட்டியல் தாக்கல் இல்லை)

**VERTIFICATION**

All that peace and parcel of the Punja Lands, measuring 0.79.5 Hectares or 1 Acre 97 cents, comprised in S.No.271/4 of E. Muthulingapuram Village in Sattur Taluk in Virudhunagar District.

2026–ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 24–ஆம் நாள் என் கையெழுத்தும், இந்நீதிமன்ற முத்திரையும் இடப்பட்டுள்ளது.

ILAKKIYA Digitally signed by ILAKKIYA

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சாத்துூர்.

மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,
சாத்தூர்.
அசல் வழக்கு எண். 62/2023
தீர்ப்பாணை
நாள் – 24.04.2026.